மே - 15

**"அத்திமரம் துளிர்விடாமல் போனாலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பேன். என் இரட்ச்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" - ஆப 3 : 17, 18**

தீமை செய்கிறதினால் கிடைக்கிற இயற்கையான பலன்களுக்குரிய கசப்பான அனுபவங்களின் சில படிப்பினைகளை உலகம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் உலகத்தில் தீமையை அனுமதிக்கிறார் என்று நாம் அறிகிறோம். ஆனால் பரிசுத்தவான்களை சோதிப்பதிலும், அவர்களுடைய குணத்தை பண்படுத்துவதிலும், அவர்களை நற்குணமுள்ளவர்களென்று நிரூபிப்பதிலும், உண்மையுள்ளவர்களுக்கு தேவன் ஒதுக்கி வைத்திருக்கிற அதிசயமான காரியங்களை சுதந்தரித்துக் கொள்ள, பரிசுத்தவான்கள் சம்பந்தமாகவும் தீமையின் ஒரு ஊழியம் உண்டு என்று நாம் அறிகிறோம். **-Z '03, 94 (R 3167)**

தேவனுடைய முன்னறிவில், மாம்சபிரகாரமான சில இஸ்ரவேலரும் ஆவியின் பிரகாரமான இஸ்ரவேலரும் முறையே சொல்லர்த்தமான பாபிலோனிலும், அடையாளமான பாபிலோனிலும் சிறைப்பட்டுப்போக அவர்களை அனுமதிக்க அவர் பிரியமாயிருந்திக்கிறார். அங்கே பொதுவாக மனுக்குலத்தின் மேல் செல்வாக்கைச் செலுத்தி கனிகொடுக்க மிகவும் கொஞ்ச சந்தர்ப்பமே இருந்தது. ஆனாலும் அடையாளமான பாபிலோனிலுள்ள உண்மையுள்ளவர்களை, தங்களுடைய அற்புதமான இரட்சிப்பின் வேலைகளின் காரணமாக தேவனிலும் கிறிஸ்துவிலும், மகிழ்ச்சியடைய கர்த்தருடைய கிருபை சாத்தியமாக்கியிருக்கிறது. யுகத்தின் கடைசி முடிவிலுள்ள சபைக்கும் மற்ற தேவனுடைய வகுப்பாருக்கும் சில பொருந்தாத, பலன் கொடுக்காத எதிர்கால அனுபவங்கள் வருகின்றன. ஆனால் இவைகளின் மத்தியில் இந்த மூலவாக்கியம் தீர்க்க தரிசனமாக வாக்குக்கொடுக்கிற மாதிரியாய், அவள் (சபை) கர்த்தருடைய விசேஷ தயவில் இன்றும் சந்தோஷம் காண்கிறாள். **- P '30, 77, 78.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யோவா 15:21; 16:20,33; அப் 14:22; 20:23,24; ரோம 8:18, 2கொரி 4:17,18; சங் 103:9; 126:5,6; ஏ சா 54:7,8; 61:2,3; பிலி 4:4; 1தெச 5:16; 1பேது 1:6; 4:13,14; 5:10.

**கோபுர வாசிப்பு : Z '14, 19 (R 5383)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் துன்பத்தில் மகிழ்ச்சி அடைந்தேனா? அதில் உதவியாயிருந்தது அல்லது இடையூறாயிருந்தது எது? அது எதில் முடிந்தது?